சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 256/2022

பெயர்: ஈஸ்வரன் வா.சா.1 தேதி **24.09.2025**

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நாங்கள் எத்தனை செண்ட் பூமியை போக்கியத்திற்காக பெற்றுள்ளோம் என்றால் 20 சென்ட். அ.வ.எண். 255/2022 வழக்கில் கண்ட சொத்திற்கு எந்த பக்கத்தில் இந்த வழக்கில் கண்ட சொத்து உள்ளது என்றால் ஒரே சதுரமாகத்தான் உள்ளது. மேற்படி வழக்கு சொத்தும் இ வ்வழக்கு சொத்தும் ஒரே சதுரமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 35 சென்ட் என்றால் சரிதான். அது இரண்டு தடுப்பாக உள்ளது. நான் சொல்வது போன்று சங்கதிக்கு ஆதரவாக வருவாய்துறை ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். மேற்படி சொத்தின் சர்வே எண்.127/1A, 127/1B என பிரித்துள்ள சங்கதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்துக்கள் ஏற்கனவே மேலே கூறியவாறு பிரிக்கப்பட்டுவிட்டது என்றாலும், மேற்படி சொத்தானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட ரூ.1,00,000/- தொகையை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 04.11.2018ல் கொடுத்தேன். 04.11.2018 ம் தேதி பிரதிவாதிகள் எவ்வித தொகையும் பெறவில்லை என்றாலும், அதற்காக ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உண்மையிலேயே நான் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தில் சொல்லப்பட்ட சொத்துக்கள் பிரதிவாதிகளினுடையது தானா என உறுதிபடுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- ( ஈ.முத்துசாமி)

சார்பு நீதிபதி

குளித்தலை.